

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் புறவழிச்சாலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக 01.11.2025 அன்று துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில்,நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.



கடலூர் மேற்கு மாவட்டம், திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் பங்கேற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டத்தில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# 23,000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, நவ. 3 -

இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வருகை குறித்து இராணிப் பேட்டை மாவட்டத்திற்கு இன்று (3.11.2025) கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டத்திற்கு காலை முதல் மாலை வரை பல்வேறுஅரசு நிகழ்ச்சி களில் 23000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கியும், கழக நிகழ்ச்சி களிலும் கலந்து கொண்டு சிறப்பு செய்கிறார் கள். காலை 10.00 மணிக்கு இராணிப்பேட்டை நகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர்அவர்கள் தங்கியிருந்த நினைவு இல்லம் திறப்பு விழா.

• காலை 10.15 மணிக்கு Geekay உலகப்பள்ளி இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

• இராணிப்பேட்டை



அம்மூர் சமத்துவபுரம் எதிரில் - 10.30 மணியளவில் அரசு நலத்திட்டங்களை வழங்கி சிறப்புரை நிகழ்த்துகிறார்.

• காலை 11.00 மணிக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆற்காட்டில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கிறார்

• 11.30மணிக்கு ஆற்காடு,விளாப்பாக்கம், ஸ்ரீ மகாலட்சுமி கலை கல்லூரி"கலைஞர் உடன்பிறப்புக்களுடன் உரையாடல்" நிகழ்ச்சி நடத்துகிறார்.

• மேற்கண்ட அனைத்து நிகழ்சிகளிலும் நமது மாவட்டத்தில் உள்ள கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிகு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாசிச பா.ஜ.க. அரசு எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்நோக்கத் தோடு தீவிர வாக்கு சிறப்பு சுருக்க திருத்த திட்டத்தை நடைமுறைபடுத்த திட்டமிட்டுள்ளதின் ஒரு பகுதியாக நமது தமிழ்நாட்டிலும் நவம்பர் முதல் வாரத்தில் நடத்தப்படவுள்ளது (S.I.R)அது சமயம், மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள், கழக சார்பு அணியின் நிர்வாகிகள் குறிப்பாக BLA2, BLC, BDA ஆகியோர் ஒன்றிணைந்து விழிப்போடு இருந்து பாசிச பா.ஜ.கவின் ஜனநாயகமற்ற உள்நோக்கத்தை தகர்த்தெரிந்து உண்மையான தகுதி வாய்ந்த வாக்காளர்களை இடம் பெற செய்திட தலைமைக் கழகம் என்ன வழிமுறைகளை நமக்கு வகுத்தளிதுள்ளதோ, அதன் அடிப்படையில் தீவிரமாக கடைபிடித்து செயலாற்றுவோம், வெற்றி வாகை சூடுவோம் என்தீர்மானிக்கப்படுகிறது.

SIR க்கு ஏதுவாக தலைமைக்கழகத்திலிருந்து அளிக்கப்பட்டுள்ள நோட்டு புத்தகத்தில் வேறு தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், தொகுதிக்குள் இடம் பெயர்ந்த வாக்காளர்கள், 18 வயது நிரம்பிய முதல் வாக்காளர்கள் அவர்களிடம் உள்ள அடையாள ஆவணங்கள் போன்றவற்றை BLC சரிபார்த்து குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தகுதியுள்ள எந்த வாக்காளர் பெயரும் வாக்காளர் பட்டியலில் விடுபடாமல் பார்த்துக் கொள்வதும், தகுதியற்ற எந்த ஒரு நபரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுவிடாமல் பார்த்துக் கொள்வதும் அடுத்த ஒரு மாதத்தில் நமக்கு உள்ள தலையாய பணியாகும்.

இப்பணிகளில் உள்ளூர் கழக வழக்கறிஞரணியும், தகவல் தொழில்நுட்ப அணியும் பகுதிநகரஒன்றியபேரூர் கழகச் செயலாளர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை -

# ரூ.65.99 கோடியில் கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் புதிய சாலை!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை. நவ. 3 -

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் புறவழிச் சாலையை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக (01.11.2025) அன்று துவக்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் ரூபாய் 65.99 கோடியில் திருச்செந்தூர், பாபநாசம்,தென்காசி, குற்றாலம், செங்கோட்டை ஆகிய ஊர்களுக்கு செல்லும் வசதியாக புதிதாக அமைக்கப்பட்ட புறவழிச் சாலை துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டு வைத்து அப்பகுதி மக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்.

பின்னர் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய மக்கள் பயன் பெறும் வகையில் சிறப்பான திட்டங்களை அறிவித்து தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் அம்பாசமுத்திரம் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று முதல்வர் அவர்கள் புறவழிச் சாலையினை காணொலி காட்சி வாயிலாக இன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது போக்குவரத்து தடையில்லாமல் இயங்கவும்,பொது மக்களின் நேர விரய த்தை தவிர்க்கவும், விபத்துக்களை குறைக்கவும், இப்பகுதியில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை முக்கிய பங்கு வகிக்கிறது.

அ.தி.மு.க.விலிருந்து சட்டமன்ற உறுப்பினர் செங்கோட்டையன் நீக்கம் செய்யப்பட்டது.தொடர்பாக எந்த கடிதமும் அ.தி.மு.க. சார்பில் சட்டமன்ற பேரவைக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு கடிதம் அளிக்கும் பட்சத்தில் மனு மீது பரிசீலனை செய்யப்படும். அ.தி.மு.க.அளிக்கும் ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு நடத்தி செங்கோட்டையன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரதப் பிரதமர் உயர் பதவியில் இருந்து கொண்டு தேர்தலுக்காக தமிழகம் குறித்த வார்த்தைகளை பயன்படுத்தி இருக்க வேண்டாம். தமிழகத்தில் வடமாநிலத்தவர் கள் துன்பமாக இல்லை,இன்பமாக இருக்கின்றனர்.வட மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் வசிப்பவர்களும் தமிழக அரசின் திட்டங்களை பயன்படுத்தி பயன் பெற்று வருகின்றனர்.

பா.ஜ.க.கூட்டணியில் உள்ள நிதீஷ் குமார் செய்யும் துன்பத்தால் தான் அங்கிருந்து புலம்பெயர்ந்து, அங்கு உள்ளவர்கள் தமிழகம் வந்து,இன்பமாக வாழ்கிறார்கள்.பாபநாசம் மணிமுத்தாறு அணையை இணைப்பதற்கான ஆய்வு நடத்தி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.நகராட்சி நிர்வாகத் துறையில் 2538 பணி இடங்களை அமைச்சர் கே.என்.நேரு நேர்மையாக வெளிப்படை தன்மையோடு அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் நியமனம் செய்துள்ளனர்.பணி நியமனத்தில் எந்த தவறும் நடைபெறவில்லை.அமலாக்கத்துறை தமிழக டி.ஜி.பி.க்கு பணி நியமனத்தில் ஊழல் நடந்திருப்பதாக விசாரணை நடத்த கடிதம் அனுப்பி உள்ளது.இந்த கடிதம் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது,நீதிமன்ற அவமதிப்பு ஆகும். உறுதிப் படுத்தப்படாத ஆவணங்கள் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அல்லது விசாரணை ஆகியவையை அனுமதிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமலாக்கத்துறை ஆகியவை சகாரா நிறுவனத்தில் 2017 ம் ஆண்டு சோதனை நடத்திய போது தற்போதைய பிரதமர் குஜராத் முதலமைச்சராக இருந்த போது 25 கோடியை நான்கு தவணையாக கையூட்டு பெற்றதாக தகவல் வெளியானது.இது தொடர்பாக பொதுநல வழக்கில் பிரதமர் மீது சுமத்தப்பட்ட கையூட்டு குற்றச்சாட்டு தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க கேட்கப்பட்டது. அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் உயர் அரசியலமைப்பு செயல்பாட்டாளர்கள் மீது உறுதி செய்யப்படாத ஆவணங்கள் மூலம் விசாரணைக்கு உத்தரவிட்டால் ஜனநாயகத்திற்கு ஆபத்தானது, எதிரானது,என தீர்ப்பளித்தனர்.எந்த தவறும் செய்யாத அமைச்சர் கே என் நேரு மீது ஊழல் குற்றச்சாட்டு என அமலாக்கத் துறை தமிழக டி.ஜி.பி.க்கு தபால் கொடுத்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மீறி உறுதிப்படுத்தப் படாத ஆவணங்களை வைத்து அமைச்சர் நேரு மீது ஊழல் குற்ற சாட்டினை வைத்து தமிழக டி.ஜி.பி.க்கு கடிதம் அனுப்பியது தவறு.குஜராத் முதலமைச்சர் ஆக இருந்தபோது பிரதமர் மோடி கையூட்டு பெற்றதாக வெளியான ஆவணங்களை வைத்து அமலாக்கத்துறை அவரை கைது நடவடிக்கைக்கு ஆணையிடுமா அதற்கு அமலாக்க துறைக்கு தைரியம் உள்ளதா? என அவர் கேள்வி எழுப்பினர்.

மணல் ஊழல் டாஸ்மாக் ஊழல் என உறுதிப் படுத்தப்படாத தகவல்களை வைத்து தேர்தல் நேரத்தில் தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்கலாம் என்ற ஒத்த நோக்கத்தில் இது போன்று அமலாக்கத் துறை செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மீது அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை செய்ய டி.ஜி. பி.க்கு கடிதம் அனுப்பிய குற்றத்திற்காகவே அமலாக்கத்துறை அதிகாரி மீது 2017 உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மீது நடவடிக்கை எடுக்கலாம்.தேர்தல் நேரத்தில் அமலாக்கத்துறை வேண்டுமென்றே இதுபோன்று செயல்படுகிறது.தமிழக ஆளுநர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய பாதி மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார். மீதி மசோதா அவரிடமே கிடப்பில் உள்ளது.

இவ்வாறு சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பரணிசேகர், விக்ரமசிங்கபுரம் நகர்மன்ற தலைவர் செல்வசுரேஷ் பெருமாள்,அம்பை நகர் மன்றத் தலைவர் பிரபாகரன், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணை தலைவர் இசக்கிப்பாண்டி,ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாலமன் டேவிட்,அருண் தவசு பாண்டியன்,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,அரசு வழக்கறிஞர் காந்திமதி நாதன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. இலக்கிய அணி

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நிய மிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

**தலைவர்:-** என். தங்கவேல் 1/52, பூசாரிப்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642205, திருப்பூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்-** தாரை. பி. சிவா 564, பழனி சாலை, வெஞ்சமடை, எஸ்.வி. மில்ஸ் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642128, திருப்பூர் மாவட்டம்.

**அமைப்பாளர்:-** க. சாமி 3/19, குருவப்பநாயக்கனூர், மானுப்பட்டி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்:**1) பெ. பழனிச்சாமி 3/240, காமராஜ் நகர், சின்னாம்பாளையம், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம். 2)ஆர். ஜெகதீஸ்வரன் 2/158, மூங்கில்தொழுவு, மூங்கில்தொழுவு அஞ்சல், ஜக்கார்பாளையம் வழி, உடுமலைப்பேட்டை - 642202, திருப்பூர் மாவட்டம். 3) கே. தங்கான் 2/139, தேவநல்லூர் லட்சுமாபுரம் அஞ்சல், பொள்ளாச்சி - 642187, திருப்பூர் மாவட்டம். 4) கு. தம்பிதுரை 36/7, ஐஸ்வர்யா நகர், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642113. 5) மு. யாசர் அராபாத் 6/25, வடக்கு தெரு, சோழமாதேவி, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 1.11.2025

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
தி.மு.க. இலக்கிய அணி

### நெல்லை கிழக்கு மாவட்டம் –

# நாங்குனேரி - இராதாபுரம் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!

நெல்லை, நவ. 3 -

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாங்குனேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி (BLA2,) (BDA ) மற்றும் சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) ஆலோசனைக் கூட்டம் இன்று (3.11.2025) எனது (நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் ) தலைமையில் நடைபெறுகிறது. என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி என் வாக்குச்சாவடி வெற்றிச்சாவடி (BLA2,) (BDA ) மற்றும் சிறப்பு வாக்காளர் திருத்தம் ஆலோசனை கூட்டம் இன்று (03.11.2025) திங்கள் கிழமை காலை 8.30 மணிக்கு வள்ளியூர் பி.ஆர். மஹாலில் வைத்து இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக் கும்,காலை 10.30 மணிக்கு செங்குளம் அழகு மஹாலில் வைத்து நாங்குனேரி சட்டமன்ற தொகுதிக் கும் எனது தலைமையில் (கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகா ம் பெல்) நடைபெறுகிறது.



இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன்,சட்டத்துறை துணை செயலாளர் எஸ்.ராஜாமுகமது, தலைமை கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ் ஆகியோர்கள் பங்கேற்று சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) குறித்து சிறப்பிக்கின்றனர்.

ஆகவே நாங்குனேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், நாங்குனேரி, இராதாபுரம் தொகுதி களின் ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள்,(BLA2,)(BDA) மற்றும் கழக வழக்கறிஞர்கள்,DLC, CLC, ULC, TLC அனைவரும் இந்த சிறப்பு வாக்காளர் திருத்தம் தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. என் வாக்குச்சாவடிவெற்றி ச்சாவடி குறித்து.

2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி எட்டையாபுரம் நாவலக்கம்பட்டி இடையே முதல்வரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.240.11லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி. மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் நவநீதக்கண்ணன், புதூர் ராதாகிருஷ்ணன், சின்னமாரி முத்து, இம்மானுவேல், வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, மத்திய ஒன்றியம், மற்றும் பள்ளிகொண்டா பேரூர் திமுக,சார்பில் BLA2, கிளை கழக செயலாளர்கள், மற்றும் முகவர்கள் கூட்டம், மத்திய ஒன்றிய செயலாளர் ஏரிப்புதூர் பி.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக, மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கிளை கழக செயலாளர்கள், BLA2,BLC,BDA, ஆகிய நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றினார், இதில் பள்ளிகொண்டா பேரூராட்சி செயலாளர் ஜாகீர் உசேன்=மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.